**இலகு புகையிரத போக்குவரத்து செயற்திட்டம் - 2021**

இலகு புகையிரத போக்குவரத்து செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மைக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2019 மார்ச் 11 ஆம் திகதிய செயற்திட்ட விஞ்ஞாபனத்தின் ஐஐ ஆம் பின்னிணைப்பின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளது. வினைத்திறனான போக்குவரத்து இயலளவினை மேம்படுத்துதல் மற்றும் போக்குவரத்து தேவையின் விரைவான அதிகரிப்பு காரணமாக போக்குவரத்து நெரிசலிற்கு உதவுவது பெரும் சவாலாகவுள்ள கொழும்பு பெருநகர் பகுதியில் இலகு புகையிரத போக்குவரத்தினை (டுசுவு) அறிமுகப்படுத்துவதன் மூலம் பொது போக்குவரத்து சேவையை மேம்படுத்தி அதன் மூலம் போக்குவரத்து பிரச்சனையை குறைப்பதன் ஊடாக நகர சுற்றாடலை மேம்படுத்துவதற்கு பங்களித்தல் என்பன இச் செயற்திட்டத்தின் நோக்கங்கள் ஆகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ஜப்பான் யென் 246,641 மில்லியனாக காணப்பட்டதுடன் அதில் ரூபா 286,839 மில்லியனுக்குச் சமமான ஜப்பான் யென் 200,215 மில்லியன் தொகை ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் 2019 – 2024 காலப்பகுதியின் போது 06 பகுதிகளின் கீழ் நிதியளிக்கப்படுகின்றது. எஸ்எல் - பி119 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் பகுதி – 1 இன் பிரகாரம் பகுதி - 1 இன் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 59,100 மில்லியனுக்கு சமனான ஜப்பான் யென் 41,252 மில்லியன் ஆகும். அதில் ரூபா 43,037 மில்லியனுக்கு சமனான ஜப்பான் யென் 30,040 ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் செயற்பாடுகளினை 2019 மார்ச் 25 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2024 திசெம்பர் 31 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

எனது அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களை தவிர்த்து, செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும்

நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல. | கணக்கீட்டு குறைபாடுகள் | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டின் யூலை முதல் திசெம்பர் வரையிலான மாதங்களுக்குச் செலுத்த வேண்டிய ஆலோசனைக் கட்டணம் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. எனவே, செயற்திட்டத்தின் நடைமுறைப் பொறுப்புக்கள் அந்தத் தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன. | 754.23 | சம்பந்தப்பட்ட விலைப்பட்டியல்கள் செலுத்த வேண்டிய விலைப்பட்டியல்களாக இனங்காணப்பட்டு அமைச்சரவையின் அங்கீகாரத்தின் பின்னர் நிதியேற்பாடு மேற்கொள்ளப்படலாம். | செலுத்த வேண்டிய தொகை பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட வேண்டும். |
| (ஆ) | முன்னைய ஆண்டின் இறுதியில் ஆலோசனை நிறுவனத்தால் வழங்கப்பட்ட 13 விலைப்பட்டியல்கள் தொடர்பாக செலுத்த வேண்டிய வற் (ஏயுவு) தொகைகள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. எனவே, நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள நடைமுறைப் பொறுப்புக்கள் அத் தொகையால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளன. | 192.02 | விலைப்பட்டியலுக்கான அமைச்சரவை அங்கீகாரத்தின் பின்னர், தொடர்புடைய ஏயுவு பகுதிக்குப் பின்னர் நிதியேற்பாடு மேற்கொள்ளப்படலாம். | செலுத்த வேண்டிய தொகை பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட வேண்டும். |
| (இ) | 2019 ஆம் ஆண்டில் இலங்கை மின்சார சபைக்கு செலுத்தப்பட்ட வேலை ஆரம்பிப்பு முற்பணம் நிதிக்கூற்றுக்களில் நடைமுறைச் சொத்தாகக் காட்டப்படுவதற்குப் பதிலாக செலவினங்களாகக் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் செயற்திட்டம் 2020 ஒக்தோபர் 06 இல் அதன் செயற்பாடுகளை நிறுத்தியிருந்தது. எனினும், 2021 திசெம்பர் 31 வரை முற்பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | 44.04 | இணங்கப்பட்டுள்ளது. | நடைமுறைச் சொத்துக்களின் கீழ் முற்பணங்கள் காட்டப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | பொது திறைசேரியால் மேற்கொள்ளப்பட்ட சமப்படுத்தல் சீராக்கம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | 173.7 | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | மீளாய்வாண்டில் உள்ளவாறான சமப்படுத்தல் சீராக்கங்கள் கணக்குகளிற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். |

**3. பௌதீக செயலாற்றல்**

-----------------------------

**3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்**

----------------------------------------------------------------------------

| கூறு | | கணக்காய்வு விடயங்கள் | தாமதத்திற்கான காரணங்கள் | முகாமைத் துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | காணி சுவீகரிப்பு | காணி சுவீகரிப்பு சட்டத்தின் 10.1 ஆம் பிரிவின் கீழ் ஏறத்தாழ 21 ஹெக்டெயர் பரப்பளவில் டிப்போ பகுதிகளை நிர்மாணிப்பதற்கு தேவையான காணியை சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் முன்னைய ஆண்டின் இறுதியில் செயற்திட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டதால் காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டன. | செயற்திட்ட முடிவுறுத்துதல். | கருத்துரை வழங்கப்படவில்லை. | விலக்கல் செயன்முறையை இறுதி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ஆலோசனை சேவை | ஆலோசனை சேவையின் 16 ஆலோசனை அறிக்கைகளில், 11 அறிக்கைகள் மாத்திரமே ஆலோசகர்களால் வழங்கப்பட்டுள்ளன. மேலும், பெறப்பட்ட அறிக்கைகளில் 7 அறிக்கைகள் மாத்திரமே செயற்திட்டத்தால் மதிப்பாய்வு செய்யப்பட்டன. அதில் 03 அறிக்கைகள் மதிப்பாய்வுக்குப் பின்னர் செயற்திட்டத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் ஆலோசனை உடன்படிக்கைகளின் பிரகாரம் சேதங்களை அறவீடு செய்வதற்கு ஏற்பாடுகள் உள்ளடக்கப்படாததன் காரணமாக ஏனைய 05 அறிக்கைகள் மீது தாமதக் கட்டணங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திட்டமாக ஆலோசனைக் குழுவைத் திரட்டவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | எஞ்சியுள்ள ஆலோசனைப் பணிகளை விரைவுபடுத்துவதற்கு திருத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன் சேதத்தை அறவீடு செய்வதற்கு ஆலோசனை உடன்படிக்கைகளில் ஏற்பாடுகள் சேர்க்கப்பட வேண்டும். |

**3.2 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| முன்னைய ஆண்டின் இறுதியில் இச்செயற்திட்டம் இடைநிறுத்தப்பட்டிருந்த போதிலும், மாலபேயில் இருந்து பத்தரமுல்லைக்கு செல்லும் பயன்பாட்டுப் பாதைக்கான மூலப்பொருள் செயன்முறைப்படுத்தலை தொடங்குவதற்காக இலங்கை மின்சார சபைக்கு வழங்கப்பட்ட ரூபா 36 மில்லியன் தொகை மற்றும் கொழும்பு நகருக்குள் நிலத்தடி பயன்பாட்டு பாதையை மாற்றுதல் மற்றும் நிலத்தடி கேபிள் ஒட்டுதல் என்பவற்றிற்கு வழங்கப்பட்ட ரூபா 8 மில்லியன் தொகையான வேலை ஆரம்பிப்பு முற்பணங்கள் 2022 மே வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | முற்பணத்தை உடனடியாக அறவீடு செய்வதற்கு திருத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

**3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள் தொடர்பான விடயங்கள்**

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| (அ) | முன்னைய ஆண்டில் செயற்திட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டதன் காரணமாக, ஆலோசனை நிறுவனம் அதற்கு பெற வேண்டிய ஐ.அ.டொலர் 23.65 மில்லியன் தொகை உள்ளடங்கலாக ஐ.அ.டொலர் 31.36 மில்லியன் தொகையை கோரியிருந்தது, அவ் விடயம் தொடர்பாக பேச்சுவார்த்தை நடாத்துவதற்காக 2021 பெப்ரவரி 23 இல் அமைச்சரவையால் குழுவொன்று நியமனம் செய்யப்பட்டிருந்தது. பேச்சுவார்த்தைகள் தாமதமானதால், தாமதமான காலப்பகுதிக்கு புழுளுடு மூலம் வட்டி செலுத்தப்பட வேண்டியிருந்தது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | நியமனம் செய்யப்பட்ட குழு உடனடியாக இவ் விடயம் தொடர்பாக பேச்சுவார்த்தை நடாத்த வேண்டும். |
| (ஆ) | 2020 செப்தெம்பர் 28 ஆம் திகதிய 20.⁚.1450.⁚.312.⁚.002 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் செயற்திட்ட அமுல்ப்படுத்தல் முகவராக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளருக்கு செயற்திட்டத்தை இடைநிறுத்தி செயற்திட்ட அலுவலகத்தை மூடுமாறு அமைச்சரவை உத்தரவிட்டிருந்தது. எனினும் செயற்திட்டத்தை இடைநிறுத்துவதற்கு முன்னர் சட்டமா அதிபரின் அபிப்பிராயம் மற்றும் நிதி அமைச்சின் கருத்துக்கள் பெறப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கு முன்னர் முறையான சாத்தியவள ஆய்வு நடாத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | முன்னைய ஆண்டில் இச் செயற்திட்டத்தை இடைநிறுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் காரணமாக மொத்தக் கடன் தொகையின் 0.2 சதவீதம் தொடர்பாக 2019 மே 23 இல் கைச்சாத்திடப்பட்ட கடன் உடன்படிக்கையின் பிரகாரம் முன் இறுதிக் கட்டணமாக செலுத்தப்பட்டிருந்த யென் 60.08 மில்லியனுக்கு சமமான ரூபா 102.73 மில்லியன் தொகை பயனற்ற செலவினமாகியிருந்தது. அதே போல் கடன் வழங்கும் முகவராண்மைக்கு யென் 2,703.18 இற்கு சமமான ரூபா 4,622.45 மில்லியன் தொகையான கடனை திருப்பிச் செலுத்துவதற்கு கடன வழங்கும் முகவராண்மையுடன் உடன்படிக்கை கைச்சாத்திப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு கடன் வழங்கும் முகவராண்மையுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வேண்டும். |